அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண்: 46 /2017
தேதி: 13.04.2017

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்களின்

## தமிழ் புத்தாண்டு வாழ்த்து செய்தி

வந்தவர்களை வாழவைப்பது தமிழர்களுக்கே உரிய அடையாளமாக இன்றுவரை திகழ்ந்துவருகிறது. தமிழர்களின் பெருமை இந்த உலகே அறிந்ததாகும். ஆனால் தற்போது நிகழ்ந்து வரும் நிகழ்வுகள் அனைத்தும் தமிழர்களின் பெருமைகளை சீர்குலைக்கும் நிகழ்வாகத்தான் இருக்கிறது.

இந்திய திருநாட்டில் தமிழ்நாட்டிற்கு நடந்துவரும் அவலங்கள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டுதான் செல்கிறது. விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என தமிழர்கள் பல்வேறு விதத்தில் தொடர்ந்து வஞ்சித்து வருவதுதான் மிச்சம். தமிழர்களின் உரிமைகளையும் கடுமையாக போராடித்தான் பெறவேண்டியிருக்கிறது.

புதிதாக தொடங்கவிருக்கும் தமிழ் புத்தாண்டான ஹேவிளம்பி வருடம் தமிழர்களின் துயரங்களை போக்கி உலங்கெங்கும் உள்ள தமிழர்களுக்கு சிறப்பான ஆண்டாக அமைய வேண்டும். இந்த புதிய ஆண்டில் வறட்சி நீங்கி விவசாயம் செழிப்படையவும், அனைத்து தொழில்களும் வளர்ச்சியடையவும் வேண்டும். தமிழர்களின் வாழ்வில் வளமும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்க வேண்டுமென்று தமிழகம் இந்தியா மற்றும் உலகெங்கும் உள்ள தமிழக மக்களுக்கு என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை தொடர்ந்து பேணிகாப்போம், எந்த ஒரு சூழ்நிலையிலும் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்று உறுதிமொழி எடுப்போம்.

வாழ்க தமிழ் ! வளர்க தமிழகம் !

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com